**மாவட்ட தேர்தல் அலுவலகம்**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 01** **நாள்: 11.03.2019**

**<u>பாராளுமன்ற பொதுத்தேர்தல் – 2019</u>**

**தேர்தல் அமைதியாக நடைபெற அனைத்துக் கட்சியினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அனைத்துக் கட்சி கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்ற பொதுத்தேர்தல்–2019 வருகின்ற 18.04.2019 அன்று நடைபெறும். அதேநாளில் எண் 2 சென்னை வடக்கு பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட எண் 12 பெரம்பூர் சட்டமன்ற இடைத்தேர்தலும் உடன் சேர்த்து நடத்தப்படும் என இந்திய தேர்தல் ஆணையத்தால் 10.03.2019 அன்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தை விதிகள் உடனடியாக பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளிலும், இடைத்தேர்தல் நடத்தப்படும் சட்டமன்ற பகுதிக்கும் முழுமையாக அமலுக்கு வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து, சென்னை மாவட்டத்தில் தேர்தல் விதிமுறைகள் கடைப்பிடித்தல் தொடர்பாகவும், இணையதளம் மூலம் அனுமதி பெற விண்ணப்பிக்கும் முறைகள் குறித்தும் அனைத்துக் கட்சி பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.03.2019) ரிப்பன் மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தேர்தல் நேரத்தில் (தேர்தல் குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து தேர்தல் பணி முடிவடையும் நாள் வரையில்) அரசியல் கட்சிகளால் பின்பற்றப்பட வேண்டிய நெறிமுறைகள் குறித்து கீழ்க்கண்டவாறு ஆலோசிக்கப்பட்டது.

**பொது நடத்தை (General Conduct)**

தேர்தல் பிரச்சாரத்தின் போது எந்த ஒரு அரசியல் கட்சியோ அல்லது வேட்பாளரோ பல்வேறு சாதியையோ, மதத்தையோ அல்லது பல்வேறு மொழி பேசுபவர்களுக்கிடையில் வெறுப்பைத் தூண்டும் வகையிலோ அல்லது வேறுபாட்டை, பகைமையை வளர்க்கும் அல்லது தூண்டும் வகையான நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது. மற்ற அரசியல் கட்சிகள் குறித்து விமர்சனம் செய்யும்போது கட்சியின் கொள்கை குறித்தே இருத்தல் வேண்டுமே அன்றி தலைவர்களின் பொது வாழ்க்கை அல்லது தனிப்பட்ட வாழ்க்கை குறித்து இருத்தல் கூடாது.

**தேர்தல் பிரச்சாரம்**

வழிபாட்டுத் தலங்களான கோயில், மசூதி மற்றும் கிறித்துவ தேவாலயங்களில் தேர்தல் குறித்த பிரச்சாரம் மேற்கொள்ளக் கூடாது. சாதி அல்லது இனம் உணர்வுகளைத் தூண்டி வாக்குகளை சேகரிக்கக் கூடாது.

**அச்சக விவரங்கள்**

அச்சகத்தின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடாமல் தேர்தல் சம்மந்தப்பட்ட துண்டு பிரசுரம், நோட்டீஸ் எதையும் அரசியல் கட்சிகள் அச்சடிக்கக்கூடாது.

**சுவரொட்டி விளம்பரம்**

பொதுக் கட்டிடங்கள் மற்றும் தனியார் கட்டடங்களில் தேர்தல் குறித்த சுவரொட்டி ஒட்டுவது மற்றும் விளம்பரங்கள் எழுதுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

**கல்வி நிலையங்கள்**

கல்வி நிலையங்களையோ அல்லது கல்வி நிலையங்களில் உள்ள விளையாட்டு மைதானத்தையோ (அரசு, அரசு உதவி பெறும் அல்லது தனியார் கல்வி நிறுவனங்கள்) அரசியல் கட்சிகள் தேர்தலுக்கு பயன்படுத்தக்கூடாது. எந்தவொரு அரசியல் கட்சியும், தனது ஆதரவாளர்களும், வேறொரு அரசியல் கட்சி நடத்தும் பொதுக்கூட்டம், ஊர்வலம் போன்றவற்றிற்கு எந்தவிதமான இடையூறையும் ஏற்படுத்திட அனுமதிக்கக் கூடாது.

எந்தவொரு அரசியல் கட்சியும் தங்களின் கூட்டம்/ஊர்வலத்திற்கு வேறெந்த கட்சியினரும் இடையூறு/தொல்லை ஏற்படுத்தினால் அதுகுறித்து வேறு துறையினரின் உதவியை நாடவேண்டுமே அன்றி தாங்களே அதற்கு எதிர்ச் செயல் புரியலாகாது.

**<u>ஊர்வலத்தின்போது பொருட்கள் விநியோகம்</u>**

வேட்பாளர் சார்பாக வாக்காளருக்கு புடவை, சட்டை போன்ற உடைகளை வழங்கக் கூடாது.

**<u>SUVIDHA-ஒற்றைச் சாளர முறையில் அனுமதி</u>**

ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது (Single Window Clearance System). இத்திட்டத்தின்படி, பின்வரும் இனங்களுக்கு இணையதளம் மூலம் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு விண்ணப்பிக்கலாம்.

வாகன அனுமதி

நட்சத்திர பேச்சாளர் கூட்டம் நடத்திட அனுமதி

பொதுக்கூட்டங்கள் நடத்திட அனுமதி

ஊர்வலம் செல்ல அனுமதி,

கட்சி அலுவலகம் திறக்க அனுமதி,

ஹெலிகாப்டர் பயன்படுத்திட அனுமதி.

www.elections.gov.in என்ற இணையதளம் மூலம் மேற்குறிப்பிட்டவைக்கு கட்சிகள் அனுமதி கோரி விண்ணப்பிக்கலாம். இந்த விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, அவரின் கருத்துக்களின் அடிப்படையில் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு, தேர்தல் நடத்தும் அலுவலரால் அனுமதி வழங்கப்படும்.

**ஊர்வல அனுமதி**

ஊர்வலம் தொடங்கும் நேரம் மற்றும் இடம், ஊர்வலம் செல்லும் வழி, ஊர்வலம் முடிவடையும் நேரம் மற்றும் இடம் போன்ற விவரங்களை ஊர்வலத்திற்கு ஏற்பாடு செய்யும் கட்சியோ அல்லது வேட்பாளரோ முன்கூட்டியே முடிவு செய்யவேண்டும். மேற்படி நிகழ்ச்சியில் இயல்பான மாற்றம் வேண்டுமானால் செய்யப்படலாம்.

**வாகன அனுமதி**

தேர்தல் பணிக்காக வேட்பாளர் பொதுக் கூட்டம், ஊர்வலம் மற்றும் வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் நடத்தும் அலுவலரிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட அனுமதியின் அசல் நகலை வாகனத்தின் முன் கண்ணாடியில் பார்வையில்படும்படி ஒட்ட வேண்டும். ஒளி நகலை ஒட்டக்கூடாது. அனுமதியில் வாகனத்தின் எண் மற்றும் எந்த வேட்பாளருக்கு வழங்கப்பட்டதோ அந்த வேட்பாளரின் பெயர் குறிக்க வேண்டும்.

**பொதுக்கூட்டம் நேரக் கட்டுப்பாடு**

பொதுக்கூட்டங்கள், ஒலிபெருக்கிகள், இரவு 10.00 மணிக்கு பிறகும், காலை 06.00 மணிக்கு முன்பும் நடத்தக்கூடாது.

**தற்காலிக கட்சி அலுவலகங்கள்**

தேர்தல் சமயத்தில் கட்சிகள் தற்காலிக அலுவலகங்களை அமைக்கலாம். ஆனால் இவ்வலுவலகங்கள்(Party/candidate office)

1. தனியார் மற்றும் அரசு நிலங்களை ஆக்கிரமிக்கக்கூடாது.
2. மத வழிபாட்டு தலங்கள் மற்றும் அதனை ஒட்டி அமைக்கக் கூடாது.
3. பள்ளிகள், மருத்துவமனைகள் சுற்றி அமைக்கக்கூடாது.
4. வாக்குச்சாவடி எல்லையிலிருந்து 200மீ சுற்றளவிற்குள் அமைத்தல் கூடாது.

**கார் பயன்படுத்திட அனுமதி**

வேட்பு மனு தாக்கல் செய்யும் போது தேர்தல் நடத்தும் அலுவலரின் அலுவலகத்திலிருந்து 100 மீட்டர் சுற்றளவிற்குள் ஒரு வேட்பாளர் அதிக பட்சமாக 3 கார்கள்தான் உபயோகப்படுத்தலாம். வேட்பு மனு தாக்கல் செய்யும் வேட்பாளரையும் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

**<u>வேட்பு மனு பரிசீலனை</u>**

வேட்பு மனு பரிசீலனையின் போது வேட்பாளர், அவரது தேர்தல் முகவர், வேட்பாளரது பெயரை முன் மொழிந்தவர் மற்றும் ஒரு நபர் ஆக மொத்தம் 4 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

**<u>பிரச்சார நேரம்</u>**

தேர்தல் பிரச்சாரம் முடிந்து வாக்குப்பதிவு முடிவடையும் நேரத்திற்கு இடைப்பட்ட 48 மணி நேரத்தில் வேட்பாளர் தேர்தல் சம்மந்தப்பட்ட விவரங்களை வாக்காளர்களுக்கு திரைப்படம், வீடியோ மூலம் திரையிட்டு ஒளிபரப்பக்கூடாது. வாக்குப்பதிவு முடியும் நேரத்திற்கு 48 மணிக்கு முன்பு வாக்கு சேகரிப்பு முடிந்த பிறகு பொதுக் கூட்டங்கள் மற்றும் ஊர்வலங்கள் நடத்துதல் வாகனங்களில் ஒலிபெருக்கியினை அமைத்து பிரச்சாரம் செய்தல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது.

**<u>தேர்தல் பிரச்சார காலம்</u>**

வாக்குப்பதிவு நேரம் முடிவடைவதற்கு 48 மணி நேரத்திற்கு முன்பு பிரச்சாரம் முடிந்ததும் வேட்பாளர் மற்றும் அவரது ஏஜென்ட் தவிர, மற்ற அனைவரும் தொகுதியை விட்டு வெளியேறிவிட வேண்டும். ஆனால் இக்கட்டுப்பாடு அரசியல் கட்சியில் தேர்தல் பணி செய்ய நியமிக்கப்பட்டு இருக்கும், பொறுப்பு அலுவலருக்கு (Office Bearer)க்கு பொருந்தாது.

**<u>வாக்குச்சாவடி முகவர்கள்</u>**

வாக்குச் சாவடியில் ஏஜென்டுகளாக நியமிக்கப்படுபவர்கள் அந்த வாக்குச் சாவடி அமைந்துள்ள பகுதியில் வாக்காளராக இருத்தல் வேண்டும். வாக்குச் சாவடி அமைந்துள்ள பகுதிக்கு வெளியில் வாக்காளராக இருப்பின் முகவர்களாக நியமிக்கப்படக்கூடாது.

**<u>பூத் சிலிப்</u>**

வாக்காளர்களுக்கு வேட்பாளர்கள் சார்பில் வழங்கப்படும் பூத் சிலிப்பில் வாக்காளர் பெயர், வரிசை எண், பாகம் எண், வாக்கு சாவடி எண் மற்றும் வாக்கு பதிவு நாள் ஆகியவை மட்டும் குறிப்பிட்டிருக்க வேண்டும். வேட்பாளரின் பெயர், சின்னம் மற்றும் அவரது புகைப்படம் ஆகியவை இருத்தல் கூடாது.

**<u>வாக்குச் சாவடிக்குள் அனுமதி</u>**

அனுமதிக்கப்பட்ட முகவர்/வேட்பாளர் மற்றும் வாக்காளர் தவிர வேறு எவரும் தேர்தல் ஆணைய முன் அனுமதியின்றி வாக்குச் சாவடிக்குள் பிரவேசிக்கக் கூடாது.

வாக்குச் சாவடிக்கு அருகில், ஆயுதங்களுடன் போகக்கூடாது.

**தேர்தல் செலவு**

பாராளுமன்ற தொகுதி தேர்தலுக்கு வேட்பாளர்கள் அதிகபட்சமாக ரூ.70,00,000/– (ரூபாய் எழுபது இலட்சம் மட்டும்) வரை மட்டுமே செலவு செய்ய இந்திய தேர்தல் ஆணையம் அனுமதித்துள்ளது.

**ஒத்துழைப்பு**

வேட்பாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினர் இத்தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திட முழு ஒத்துழைப்பை நல்குமாறு இக்கூட்டத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

வடசென்னை, மத்திய சென்னை மற்றும் தென்சென்னை பாராளுமன்ற தொகுதிகளுக்கு மூன்று தேர்தல் நடத்தும் அலுவலர்கள், 16 உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் மற்றும் 16 கூடுதல் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களும், இடைத்தேர்தல் நடைபெறவுள்ள பெரம்பூர் சட்டமன்ற தொகுதிக்கு ஒரு தேர்தல் நடத்தும் அலுவலரும், 2 உதவி தேர்தல் நடத்தும் அலுவலரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சென்னை மாவட்டத்தில் 18,83,989 ஆண் வாக்காளர்கள், 19,34,078 பெண் வாக்காளர்கள், 932 இதர வாக்காளர்கள் என மொத்த வாக்காளர்கள் 38,18,999 உள்ளனர். சென்னையில் மாவட்டத்தில் 3754 வாக்குச்சாவடிகள், 76 துணை வாக்குச்சாவடிகள் உள்ளன. இவ்வாக்குச்சாவடிகளில் பணிபுரிய 24,000 வாக்குச்சாவடி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், 10,791 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 5,997 கட்டுப்பாட்டு கருவிகளும், 6,618 VVPAT எனப்படும் யாருக்கு வாக்களித்தோம் என்று உறுதி செய்துகொள்ளும் இயந்திரமும் தயார் நிலையில் உள்ளது.

மேலும், 48 பறக்கும் படை குழுக்களும், 16 வீடியோ கண்காணிப்புக் குழுக்களும், 48 நிலைக் கண்காணிப்பு குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் மேற்கண்ட கண்காணிப்பு குழுக்களை கண்காணிக்க ரிப்பன் மாளிகையில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு அறையில் பெறப்படும் புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 17 ஒருங்கிணைப்பு அலுவலர்கள் இந்த பணிகளை சீராக கண்காணிக்கவும், தேர்தல் தொடர்பான அறிக்கைகளை தலைமை தேர்தல் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், அரசியல் கட்சியினர் மற்றும் வேட்பாளர்களுக்கு பிரச்சார விளம்பரங்களுக்கு அனுமதி வழங்கிடவும், நாளிதழ்கள் மற்றும் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் தேர்தல் குறித்து செய்திகள், விதிமீறல்கள் ஆகியவற்றை கண்டறிவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழு மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் அவர்களின் தலைமையில், மாவட்ட கூடுதல் தேர்தல்

அலுவலர்/இணை ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் கண்காணிப்பில் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவில் உறுப்பினர்களாக சமூக ஊடகம் (அ) தகவல் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரும், இந்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறையைச் சார்ந்த அலுவலர் ஒருவரும், அச்சு ஊடகத்துறையைச் சார்ந்த ஒருவரும், உறுப்பினர் செயலராக மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆகியோர் அடங்கிய ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழு பெருநகர சென்னை மாநகராட்சி இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களின் ஒருங்கிணைப்பில் செயல்படுகிறது என தெரிவித்தார்.

முன்னதாக, 48 பறக்கும் படை குழுக்கள், 16 வீடியோ கண்காணிப்புக் குழுக்கள் மற்றும் 48 நிலைக் கண்காணிப்பு குழுக்களை சேர்ந்த உறுப்பினர்களுக்கு தேர்தல் நடத்தை விதிமுறைகளை பின்பற்றுவது தொடர்பான பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை மாநகர காவல்துறை ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்களும் துவக்கி வைத்தார்கள்.

இக்கூட்டத்தில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர் / இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை மாநகர காவல்துறை கூடுதல் ஆணையாளர்கள் திரு.தினகரன், இ.கா.ப., அவர்கள் மற்றும் திரு.மகேஷ்குமார் அகர்வால், இ.கா.ப., அவர்கள், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள்/ துணை ஆணையாளர்கள் திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., அவர்கள், திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/ வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., அவர்கள், பெரம்பூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.கருணாகரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**